# Prithvi Exchange (India) Limited

**To** **22nd May, 2024**

**BSE Limited**
Corporate Relationship Department
Phiroze Jeejeebhoy Towers
Dalal Street
Mumbai- 400 001
**Scrip code 531688**

Dear Sirs,

**Sub: Submission of information pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015.**

**Ref:**

Pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015, as amended, please find enclosed e-copies of the newspaper advertisement pertaining to Audited standalone & consolidated financial results of the Company for the quarter and year ended 31st March, 2024. The advertisements were published in Makkal Kural in Tamil language and in Trinity Mirror in English Language on 20th May, 2024. The e-copies are attached for your information.

Kindly take the same on record.

Thanking you.

Yours faithfully,
**For Prithvi Exchange (India) Limited**
NARAYANAN SORNALATHA
Digitally signed by NARAYANAN SORNALATHA
Date: 2024.05.22 16:15:10 +05'30'

**N.Sornalatha**
**Company Secretary & Compliance officer**

Gee Gee Universal, 2nd Floor, Door No. 2, Mc. Nichols Road,
Chetpet, Chennai – 600 031, Tamil Nadu.
CIN : L30006TN1995PLC031931
Tel : 044 - 43434250
www.prithvifx.com

**POV** **VVS**

# Ram Mandir politics

वनिाश काले वपिरीत बुद्धि

A Sanskrit proverb says, "Vinasha Kaale vipareeta buddhi," meaning that when the time for destruction is fast approaching, one will think irrationally and negatively. This applies very well to the political parties that are dragging Lord Ram into their controversy and talk of the destruction of the palatial, wonderful Ram temple. Nobody will dare to remove a brick from this temple; there will be bloodshed and revolt.






I have visited all the temples in Ayodhya and seen how strong the sentiment and faith is in those who are extremely poor. Hinduism has withstood the test of time and nothing can diminish it. We need not unduly worry about Christians or Muslims or dragging the Ram temple into politics at this time.

In a fresh controversy, the INDIA bloc has refuted Modi's allegation that the Rahul-Akhilesh alliance in UP will bulldoze the Ram Temple if voted to power. This is an impulsive election speech of Modi, which is very hurting and highly unpalatable. Modi visited every temple all over India and saw the strength of Hinduism and people's faith. Saying that a political party would destroy the Ram Temple is an outrageous idea and a frustrating appeal for votes. The BJP and Modi have a strong hold in UP. I don't understand why such thoughts occur to Modiji.

Congress chief Mallikarjun Kharge reacted to his 'Ram Mandir Bulldozer claim' and said they were committed to protecting the religious freedom of all citizens and ensuring that the country runs as per the Constitution.

Shiv Sena (UBT) president Uddhav Thackeray and NCP (SP) chief Sharad Pawar jointly addressed a press conference in Mumbai on the last day of the campaigning for the final phase of the Lok Sabha polls in the state on May 20. Thackeray said that the INDIA bloc government will complete the construction of the Ram temple in Ayodhya, while Pawar said it will be the duty of their government to protect not just temples but all places of worship. (Maharashtra has 77,283 temples and very strong sentiments about religion and unshakable faith.)

Of late, Modi's speeches appear disturbed and divisive, fueling sentiments and negative thoughts. The BJP is strong in UP. Why should the BJP attempt to become popular by provoking sentimental reactions from the opposition and speaking of issues that have no relevance to the election?

# Renewed agenda to wipe out black money

In January 2019, we promised to wipe out black money and end corruption. It has not worked. From Jharkhand, Rajasthan, and Delhi in the North to the south, black money is available in plenty. We have not been fully successful in weeding out this evil, and it creates more problems for society and encourages drug trafficking.






It is a good sign that Prime Minister Modi, while addressing election rallies in Jharkhand and West Bengal, took a pledge saying that corrupt people in the country will not be released. All their bungalows and cars will be sold.

The black money accumulated in the government coffers will also be given to the poor. He affirmed, saying that people are his family.

Modi made this speech in Jharkhand, where mountains of currency notes were seized. After the election, Jharkhand folks are in for a bonus from black money. The BJP also has one tough job: recovering black money from its allies and giving it to the poor. Hopefully, the third pledge to end corruption and black money will become realistic to a major extent.

# Companies will think 50 times before investing in Congress-ruled states: Modi

Jamshedpur, May 20: Prime Minister Narendra Modi on Sunday lashed out at the Congress and its leader Rahul Gandhi, asserting that any industrialist will think 50 times before investing in states ruled by the party, owing to the "shehzada's use of Maoist language".

Modi, addressing a poll rally here, also accused the grand old party of patronising dynastic politics and considering Lok Sabha seats as "ancestral properties".

"The language used by the Congress 'shehzada' will make any industrialist think 50 times before investing in states ruled by the party... The 'shehzada' is using language spoken by Maoists and is extorting money through innovative methods," the PM said, in an apparent reference to Gandhi.

Modi said like the Maoists, the language used by Gandhi was to extort money from industrialists.

The prime minister's allegations came in the backdrop of the Congress leader's recent comments, referring to a speech by Modi in which he had stated that the party received money from top industrialists.

Gandhi, a former Congress president, had on Saturday said in New Delhi: "I'm ready to debate with PM Modi whenever and wherever he wants, but I'm sure he won't come. The first question I would ask PM Modi is what is his relationship with Adani..." "The PM talks about the Congress getting tempo-loads of money from Adani-Ambani, but he doesn't dare to get it probed," Gandhi had said.

In the Jamshedpur rally where he campaigned for BJP's Bidyut Baran Mahot, Modi asserted that he has broken the backbone of the Naxals, but the Congress and JMM have taken the responsibility of "extorting funds".

"I dare the CMs of Congress and INDIA bloc-ruled states to answer as to whether they agree with the anti-industry and anti-industrialist language of their 'shehzada'," he said.

Taking a dig at Gandhi over his decision to contest from the Rae Bareli Lok Sabha seat, he said the Congress 'shehzada' rushed to the constituency, contending that "it is my mummy's seat, which not even an eight-year-old school boy will say".

# Tie knot in elegance with Platinum love bands

Chennai, May 20: As we enter the summer wedding season, draw inspiration from your favourite celebrities when it comes to engagement ring choices. Celebrities worldwide have long favoured engagement rings set in platinum for their memorable "I Do" moments as this naturally white metal is renowned for its elegance, durability, and timeless appeal. From A-list actors to music sensations, these celebrities have embraced platinum as the ultimate symbol of commitment, sparking a trend that continues to captivate couples globally. Priyanka Chopra's engagement ring features a cushion-cut center diamond of approximately 5 carats with tapered baguette diamonds on the side, set in platinum.

Platinum is 95% pure, and not only durable but also exceptionally dense, ensuring longevity without tarnishing or losing its inherent radiance over time. Its superior strength makes it the ideal setting for diamonds and gemstones, ensuring a secure hold while enhancing their brilliance. Leading designers and jewellery brands like Cartier, Harry Winston, Tiffany & Co., and Fred Leighton prefer platinum for its versatility and ability to showcase precious gemstones securely.

Speaking on the latest trends when it comes to engagement rings set in platinum, Pallavi Sharma, Business Director, Platinum Guild International (PGI)- India said, "Influenced by global trends, Platinum Love Bands have emerged as a popular option in the world of engagement rings. Some interesting trends include the 'Modern Vintage' aesthetic- that blends traditional styles with contemporary design elements, offering a fresh take on classic designs, the "Three Stone or 'Trinity'" rings, featuring diverse stone shapes set in platinum, symbolizing enduring love; and the "Toi Et Moi" - a style that is favoured by celebrities, and pairs two gems to represent intimate connections, with platinum ensuring durability. Couples are also exploring gemstone options beyond diamonds and solitaires along with an array of cuts, colours and bespoke designs, all set in platinum. This includes coloured gemstones like sapphires, tourmalines and emeralds, fancy cuts such as ovals, Asscher's and cushions, a mix of unique elements like enamel, ceramic and coloured rhodium accents, alongside personalized touches like vintage details and engravings."

# Govt recovers Rs. 852 crore under amnesty scheme for exporters

New Delhi, May 20: The one-time amnesty scheme for exporters who failed to meet obligations that they had agreed upon while availing duty-free imports of inputs and machinery for production has netted the government Rs 852 crore, a senior official has said.

As many as 6,705 applications were filed by the exporters to take advantage of the scheme, which enabled them to reduce their paybacks to the government for not meeting export obligations under the Advanced Authorisation (AA) and Export Promotion Capital Goods (EPCG) schemes. Officials said the money collected under the scheme could go up further.

In the normal course, if an exporter fails to meet the export obligations, the duty saved has to be paid back to the government. If repayment exceeds the time limit prescribed under the schemes, interest is also charged.

In the amnesty scheme announced in the Foreign Trade Policy released on March 31 last year, the interest was capped at 100% of exempted duties under the scheme. However, no interest was payable on the portion of Additional Customs Duty and Special Additional Customs Duty. This brought down the interest burden on exporters, as many cases of non-fulfillment of export obligations have been pending for a long time.

By November 30, exporters had to file that they will participate in amnesty scheme and the deadline of payment of customs duty and interest was March 31. The last amnesty scheme for exporters was announced back in 2011-12.

# PhonePe collaborates with LankaPay

Chennai, May 20: PhonePe, announced that it has enabled UPI payment acceptance in collaboration with LankaPay across LankaQR merchant points at a grand event held in Colombo. The event was graced by His Excellency Shri Santosh Jha, the High Commissioner of India to Sri Lanka, as the Chief Guest, who highlighted the key role played by fintech connectivity in the overall connectivity between India and Sri Lanka. Addressing the gathering Dr. Nandalal Weerasinghe, Governor of the Central Bank of Sri Lanka (CBSL), acknowledged the collaboration's capacity to unlock new opportunities and enhance competitiveness and the benefits that it would bring to Sri Lankan merchants.

Channa de Silva, CEO, LankaPay also addressed the audience and moderated an insightful panel discussion on 'The Future of Digital Payments in Sri Lanka: Opportunities for Sri Lankan Businesses,' which focused on the possibilities and growth avenues for local businesses. The session featured Mrs. Shashi Kandambi, GM/CEO, National Savings Bank; Mr. Sanjay Wijemanne, COO, Hatton National Bank PLC; Mr. Conrad Dias, Chairman, LOLC Finance PLC; and Ms. Renuka Fernando, Chairperson, Dialog Finance PLC who discussed how businesses can leverage digital payment technologies and tap into a wider market to stay competitive in an evolving economic landscape.

Following the panel discussion, Ritesh Pai, the CEO of International Payments at PhonePe, unveiled insights on leveraging UPI for global markets and the growth prospects it offers for merchants.

# FPIs withdraw Rs. 28,200 cr in equities

New Delhi, May 20: Foreign investors have pulled out a massive Rs 28,200 crore from Indian equities so far this month, owing to uncertainties about the outcome of the general elections and attractive valuations of Chinese markets.

The withdrawal was higher than a net pullout of over Rs 8,700 crore in April on concerns over a tweak in India's tax treaty with Mauritius and a sustained rise in US bond yields.

Before that, FPIs made a net investment of Rs 35,098 crore in March and Rs 1,539 crore in Feb.

Going forward, there is likely to be a dramatic change in foreign portfolio investors' equity flows in response to election results.

Political stability will attract huge inflows in the Indian market, VK Vijayakumar, chief investment strategist, Geojit Financial Services, said.

# PRITHVI EXCHANGE (INDIA) LIMITED

CIN: L30006TN1995PLC031931

Regd. Office: Gee Gee Universal, 2nd Floor, Door No.2,
Mc Nichols Road, Chetpet, Chennai – 600031, Tamil Nadu
Website: www.prithvifx.com Email: secy@prithvifx.com Phone: 044 -43434261

**AUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED 31STMARCH 2024**

(Rs. In Lakhs) except Earnings per share

| PARTICULARS | QUARTER ENDED | | | YEAR ENDED | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2024 | 31.12.2023 | 31.03.2023 | 31.03.2024 | 31.03.2023 |
| | Audited | Unaudited | Audited | Audited | |
| Total Income | 93,805.06 | 1,13,353.77 | 72,353.38 | 4,16,081.77 | 3,05,279.01 |
| Total expenses | 93,294.54 | 1,12,786.39 | 72,225.47 | 4,14,262.91 | 3,04,652.44 |
| Profit/Loss before Exceptional Items and tax | 510.52 | 567.38 | 127.91 | 1818.86 | 626.57 |
| Profit /Loss after tax | 324.05 | 425.01 | 37.18 | 1304.39 | 465.84 |
| Total comprehensive income | 232.75 | 464.96 | 31.19 | 1282.00 | 439.81 |
| Paid-up equity share capital (Face Value Rs.10/- per share) | 824.97 | 824.97 | 824.97 | 824.97 | 824.97 |
| Other equity | - | - | - | 3428.25 | 2351.63 |
| Earnings Per Share (Before Extraordinary Items) (Not Annualised) | | | | | |
| a) Basic | 3.94 | 5.15 | 0.37 | 15.82 | 5.61 |
| b) Diluted | 3.94 | 5.15 | 0.37 | 15.82 | 5.61 |

**Notes:**

**1. The above is an extract of detailed format ofquarter and year ended Audited Financial Results(Standalone & Consolidated) filed with stock exchange under Regulation 33 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations. The full format are available on the Stock Exchange Website www.bseindia.com and on the company's website at www.prithvifx.com.**

**2. The statutory auditors have expressed an Unqualified Opinion on the standalone &consolidated financial result for the Quarter& Year ended as on 31.03.2024& prepared in accordance with the Indian Accounting Standards (Ind - AS) as prescribed under section 133 of the Companies Act, 2013 Read with Rule 3 of the Companies (Indian Accounting Standards), Rules 2015 and Companies (Indian Accounting Standards) Amendment Rules, 2016.**

**3. The above Standalone &Consolidated Audited Financial Results for the Quarter& Year ended 31stMarch,2024have been reviewed by the Audit Committee on 18th May,2024 and approved at the meeting of the Board of Directors held on that date.**

**4. The company operates mainly in one business segment viz., foreign Exchange and therefore, there is only one reportable segment.**

**5. The Shareholders of the company have declared final dividend of Rs 0.50 per equity shares for FY 2022-2023 in the Annual General Meeting held on 19/09/2023. The Board of directors of the company have declared interim dividend of Rs.2 per equity shares in their meeting held on 20/03/2024. The total dividend declared and paid during the year ended 31st March, 2024 amounted toRs. 206.24 Lakhs.**

**6. The details as required under SEBI (LODR) Regulations, 2015 in relation to Standalone Results are as follows**

**Rs. In Lakhs)**

| PARTICULARS | QUARTER ENDED | | | YEAR ENDED | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2024 | 31.12.2023 | 31.03.2023 | 31.03.2024 | 31.03.2023 |
| | Audited | Unaudited | Audited | Audited | |
| Turnover | 93,805.06 | 1,13,353.77 | 72,353.37 | 4,16,081.77 | 3,05,279.00 |
| Profit Before Tax | 511.82 | 567.44 | 115.48 | 1,820.32 | 619.98 |
| Profit After Tax | 325.33 | 425.07 | 26.41 | 1305.83 | 460.91 |

**6.Previous Quarter's/ Year's figures have been regrouped/ reclassified and rearranged wherever necessary to correspond with the current quarter's classification/ disclosure.**

**For Prithvi Exchange (India) Limited**

**Sd/-Pavan Kumar kavad**
**(Managing Director)**
**(DIN : 07095542)**

**Place : Chennai**
**Date :18-05-2024**




# மாவோயிஸ்டுகளின் மொழியில் பேசி தொழிலதிபர்களிடம் இருந்து ராகுல் புதுமையான முறையில் பணம் பறிக்கிறார்

## பிரதமர் மோடி கடும் தாக்கு

ஜாம்ஷெட்பூர், மே.20

**ராகுல்காந்தி மாவோயிஸ்டுகளின் மொழியில் பேசுவதாக பிரதமர் மோடி கடுமையாக குற்றம் சாட்டினார்.**

பிரதமர் மோடி நேற்று ஜார்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் பாரதீய ஜனதா வேட்பாளரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பிரதமர் மோடிக்கு பாரம்பரிய தொப்பி அணிவிக்கப்பட்டது.

பிரச்சாரத்தின்போது காங்கிரஸ் கட்சியையும், அதன் மூத்த தலைவர் ராகுல் காந்தியையும் கடுமையாக தாக்கி பேசினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

காங்கிரசின் இளவரசர் (ராகுல் காந்தி) பயன்படுத்தும் மொழியால் எந்த தொழிலதிபரும் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் முதலீடு செய்வதற்கு முன்பு 50 முறை யோசிப்பார். ஏனெனில் இளவரசர் மாவோயிஸ்டுகளின் மொழியில் பேசி, தொழிலதிபர்களிடம் இருந்து புதுமையான முறைகளில் பணம் பறித்து வருகிறார். மாவோயிஸ்டுகளைப் போலவே, தொழிலதிபர்களிடம் பணம் பறிக்கும் மொழிகளை ராகுல் காந்தி பயன்படுத்துகிறார்.

நக்சலைட்டுகளின் முதுகெலும்பை நாங்கள் முறித்து விட்டோம். ஆனால் பணம் பறிக்கும் விவகாரத்துக்கு காங்கிரசும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும்தான் பொறுப்பு.

தங்கள் இளவரசரின் தொழில் விரோத, தொழிலதிபர் விரோத மொழியை காங்கிரஸ் மற்றும் இந்தியா கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் ஏற்கிறார்களா? என்று நான் கேட்கிறேன்.

வாரிசு அரசியலை ஆதரித்து வரும் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற தொகுதிகளை தங்கள் மூதாதையரின் சொத்துகளாக கருதுகிறது.

ரேபரேலி எனது அம்மாவின் தொகுதி என இளவரசர் அந்த தொகுதிக்கு ஓடிவிட்டார். இதை ஒரு 8 வயது பள்ளி மாணவன் கூட சொல்லமாட்டான்.

அவரது அம்மாவோ, எனது மகனை ரேபரேலிக்கு ஒப்படைக்கிறேன் என கூறுகிறார். அங்கு போட்டியிடுவதற்கு, அவர்களுக்காக உழைக்கும் ஒரு கட்சித் தொண்டரைக் கூட அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. கொரோனா தொற்றுநோயால் மக்கள் சிரமத்தில் இருந்தபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? என்று ரேபரேலியின் வாக்காளர்கள் அவரிடம் கேட்கிறார்கள்.

காங்கிரசும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும் நாட்டு வளர்ச்சிக்கு எதையும் செய்யவில்லை. ஏனெனில் அவர்கள் ஊழலில் கழுத்தளவு மூழ்கி விட்டார்கள். காங்கிரஸ்தான் ஊழலின் தாய்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

இதைப்போல மேற்கு வங்காளத்தின் புருலியாவில் பிரச்சாரம் மேற்கொண்ட பிரதமர் மோடி, ராமகிருஷ்ண மிஷனுக்கு எதிராக பேசியதாக அந்த மாநில முதல்மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜியை கடுமையாக சாடினார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'இஸ்கான், ராமகிருஷ்ண மிஷன், பாரத் சேவாஸ்ரம் சங்கம் போன்ற அமைப்புகளுக்கு எதிராக வதந்திகளை பரப்புவதில் திரிணாமுல் காங்கிரஸ் எல்லை மீறி சென்று வருகிறது. இந்த அமைப்புகளை முதலமைச்சர் (மம்தா பானர்ஜி) அச்சுறுத்துகிறார். தங்கள் வாக்கு வங்கி அரசியலுக்காக இந்த அமைப்புகள் மிரட்டப்படுகின்றன' என குற்றம் சாட்டினார்.

திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் ஊழல்வாதிகள் என கூறிய பிரதமர் மோடி, ஊழல் செய்த யாரும் தப்ப முடியாது என்பது மோடியின் உத்தரவாதம் என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும்

# பிரஜ்வல் ரேவண்ணா பாஸ்போர்ட்டை ரத்து செய்ய சிறப்பு புலனாய்வு குழு முடிவு

பெங்களூரு, மே.20–

**வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் பிரஜ்வல் ரேவண்ணா எம்.பி.யின் பாஸ்போர்ட்டை ரத்து செய்யும் நடவடிக்கைக்காக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய சிறப்பு புலனாய்வு குழு போலீசார் முடிவு செய்துள்ளனர்.**

ஹாசன் நாடாளுமன்ற தொகுதி ஜனதாதளம் (எஸ்) கட்சியின் எம்.பி.யாக இருந்து வருபவர் பிரஜ்வல் ரேவண்ணா. இவர் மீது 3 பலாத்கார வழக்குகள் பதிவாகி உள்ளது. இவரது தந்தையான முன்னாள் மந்திரியும், ஒலேநரசிப்புரா தொகுதி எம்.எல்.ஏ.வுமான எச்.டி.ரேவண்ணா மீதும் பாலியல் தொல்லை, கடத்தல் வழக்குகள் பதிவாகி இருக்கிறது. இந்த வழக்குகள் குறித்து சிறப்பு புலனாய்வு குழு போலீசார் விசாரித்து வருகின்றனர். தற்போது பிரஜ்வல் ரேவண்ணா எம்.பி. வெளிநாட்டில் தலைமறைவாக உள்ளார்.

அவர் ஜெர்மனியில் இருந்து லண்டனுக்கு சென்று விட்டதாக கூறப்படுகிறது. பலாத்கார வழக்கில் விசாரணைக்கு ஆஜராகாத பிரஜ்வல் ரேவண்ணாவை தேடப்படும் நபராக அறிவித்து, அவருக்கு எதிராக புளூ கார்னர் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அவரை கைது செய்ய சி.பி.ஐ. அதிகாரிகளிடம் வழக்கு சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களை சிறப்பு புலனாய்வு குழு போலீசார் அளிக்க வேண்டும்.

அதாவது பலாத்கார வழக்குகளில் அவருக்கு எதிராக கோர்ட்டு கைது வாரண்டு பிறப்பிப்பதுடன், கோர்ட்டில் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்ய வேண்டும். அதன்படி, நேற்று முன்தினம் பலாத்கார வழக்கில் பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு எதிராக பெங்களூரு கோர்ட் கைது வாரண்டு பிறப்பித்துள்ளது. அத்துடன் அவரது பாஸ்போர்ட்டை ரத்து செய்யவும் கோர்ட் அனுமதி வழங்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

ஏற்கனவே பிரஜ்வல் ரேவண்ணாவின் 7 வங்கி கணக்குகளை முடக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள சிறப்பு புலனாய்வு குழு போலீசார், அவரது பாஸ்போர்ட்டை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பிரஜ்வல் ரேவண்ணா, எம்.பி.யாக இருப்பதால், அவரிடம் டிப்ளோமேடிக் பாஸ்போர்ட் உள்ளது. அந்த பாஸ்போர்ட்டை ரத்து செய்யும்படி ஏற்கனவே பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் சித்தராமையா கடிதம் எழுதி இருந்தார்.

ஆனால் பிரஜ்வல் ரேவண்ணாவின் பாஸ்போர்ட் ரத்து செய்யப்படவில்லை. தற்போது அவருக்கு எதிராக கோர்ட் கைது வாரண்டு பிறப்பித்திருப்பதால், அவரது பாஸ்போர்ட்டை ரத்து செய்ய கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய சிறப்பு புலனாய்வு குழு போலீசார் முடிவு செய்துள்ளனர். இதற்காக ஓரிரு நாட்களில் பிரஜ்வல் ரேவண்ணா வழக்குகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன், அவரது பாஸ்போர்ட்டை ரத்து செய்யக்கோரி மத்திய அரசுக்கு போலீசார் கடிதம் எழுத உள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாகும் முன்பே அவரை கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போலீசார், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள்.

# முதல்வர் காப்பீட்டை ஏற்க மருத்துவமனை மறுப்பு : ரூ.3.64 லட்சத்துடன் ரூ.50,000 இழப்பீடு தர உத்தரவு

சென்னை, மே 20–

**'முதல்வர் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை ஏற்க மறுத்த மருத்துவமனை நிர்வாகம், இருதய அறுவை சிகிச்சைக்காக பெற்ற, 3.64 லட்சம் ரூபாய் கட்டணத்தை, 50,000 ரூபாய் இழப்பீட்டுடன் சேர்த்து வழங்க திருவள்ளூர் நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

சென்னை திருவொற்றியூர் காலடிபேட்டையை சேர்ந்த மோகன் என்பவர், தாக்கல் செய்த மனு:

கடந்த, 2016 முதல் இருதயத்தில் சிறியளவில் பிரச்னை இருந்து வந்தது. இதற்காக, சென்னை ஷெனாய் நகரில் உள்ள பில்ரோத் மருத்துவமனையில், 2018 டிசம்பர் 26–ந்தேதி இருதய அறுவை சிகிச்சைக்கு சேர்ந்தேன். மறுநாள் அறுவை சிகிச்சை முடிந்தது.

முதல்வர் மற்றும் பிரதமரின் மருத்துவ காப்பீட்டுக்கான அட்டையை சிகிச்சைக்கு முன் வழங்கினேன்.

அறுவை சிகிச்சைக்கு, முதல்வர், பிரதமரின் காப்பீடு அட்டைகள் ஏற்கப்படும் என்ற அறிவிப்பு, மருத்துவமனை வளாகத்தில் ஒட்டப்பட்டு இருந்தது.

இருப்பினும், இருதய அறுவை சிகிச்சைக்கு பின், காப்பீடு திட்ட அட்டைகள் ஏற்கப்படாது எனக்கூறி, 3 லட்சத்து 64,673 ரூபாய் கட்டணம் வசூலித்தனர்.

அறிவிப்புக்கு மாறாக, காப்பீடு திட்ட அட்டைகளை ஏற்காதது சேவை குறைபாடு; நியாயமற்ற வணிக நடவடிக்கை. எனவே, மன உளைச்சல் ஏற்படுத்திய மருத்துவமனை நிர்வாகம் 10 லட்சம் ரூபாய் இழப்பீடு தர வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

மனுவை, திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் எஸ்.எம்.லதா மகேஸ்வரி, உறுப்பினர்கள் பி.வினோத்குமார், பி.முருகன் அடங்கிய அமர்வு விசாரித்தது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவு:

சிகிச்சைக்கு லட்சக்கணக்கில் பணம் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் நபர், காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவச சிகிச்சை பெறுவதற்கான தகுதி பற்றி, வெளிப்படுத்தி இருப்பார்.

காப்பீடு திட்டங்களின் கீழ் தான் அறுவை சிகிச்சை மேற்கொள்ள இருப்பதாக, புகார்தாரர் அல்லது அவரது உதவியாளர் என யாரும் தெரிவிக்கவில்லை என்ற மருத்துவமனை தரப்பு வாதத்தை ஏற்க முடியாது. பணம் செலுத்தும் முறை, நோயாளியின் காப்பீட்டு திட்டத்தின் உரிமை உள்ளிட்டவை குறித்து, மருத்துவமனை அல்லது மருத்துவமனை சார்ந்த உயர் அதிகாரிகள் தான் விசாரிக்க வேண்டும்; இது கடமை. அறுவை சிகிச்சை குறித்தோ, மருத்துவர் மீதோ, எவ்வித குற்றச்சாட்டையும் கூறவில்லை.

மருத்துவமனை தரப்பு சேவை குறைபாடு புரிந்துள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. எனவே, சிகிச்சைக்கு செலுத்திய கட்டணம், 3 லட்சத்து, 64,673 ரூபாயை புகார்தாரருக்கு திருப்பி அளிக்க வேண்டும்.

மன உளைச்சல் ஏற்படுத்தியதற்கு, 50,000 ரூபாய் இழப்பீடும், வழக்கு செலவாக 5,000 ரூபாயையும், மருத்துவமனை நிர்வாகம் செலுத்த வேண்டும். இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளம், ஆந்திராவை தவிர...

# 4 கட்ட தேர்தல்: அனைத்து பகுதிகளிலும் அமைதியாக நடந்த வாக்குப்பதிவு

புதுடெல்லி, மே 20–

**4 கட்ட தேர்தல்களிலும், பெண்களை விட ஆண்களே வாக்களிக்க அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.**

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் தற்போது நடைபெறும் நாடாளுமன்ற தேர்தல், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஜனநாயக பெருவிழா.

சுமார் 145 கோடியை தாண்டிய மக்கள் தொகை கொண்ட இந்தியத் திருநாட்டில், ஓட்டு மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையே 97 கோடி. உலகின் பல நாடுகளில் மக்கள் தொகைகூட இந்த அளவுக்கு இருக்காது.

நாடாளுமன்ற 18வது நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பே, இந்த முறை மக்களின் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க அனைத்து முயற்சியும் எடுக்கப்படும் என்று தேர்தல் தெரிவித்திருந்தது. அதன்படி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர். சினிமா, விளையாட்டு துறைகளில் உள்ள பிரபலங்களை அதற்கு பயன்படுத்தினர்.

இந்தநிலையில் கடந்த மார்ச் 16ந்தேதி, நாடாளுமன்றத்துக்கான தேர்தல் தேதியை அறிவித்தது தேர்தல் கமிஷன், அப்போது தேர்தல் 7 கட்டமாக நடைபெறும் என்று தெரிவித்தது.

அதன்படி இதுவரை 4 கட்ட தேர்தல் முடிந்து விட்டது. அதாவது மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் 379 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு முடிந்து விட்டது. 45 கோடி பேர் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளனர்.

இந்த 4 கட்ட தேர்தலிலும் 66.95 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது. பெரிய வளர்ந்த நாடுகளில் கூட இந்த அளவுக்கு வாக்கு சதவீதம் இருப்பது இல்லை.

இந்த 4 கட்ட தேர்தலிலும் கடும் வெயில் வாட்டி வதைத்தது. அதையும் பொருட்படுத்தாமல் இந்த அளவுக்கு வாக்குகளை செலுத்திய வாக்காளர்களை பாராட்டலாம். வரும் காலங்களில் இந்த சதவீதம் இன்னும் அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் மக்களாட்சியின் மாண்பு சிறப்பாக அமையும்.

### பெண்களை விட ஆண்களே அதிகம்

நடந்து முடிந்துள்ள 4 கட்ட தேர்தல்களிலும், பெண்களை விட ஆண்களே வாக்களிக்க அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் என்பது தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள வாக்கு சதவீத புள்ளி விவரத்தில் இருந்து காணமுடிகிறது.

முதல் கட்ட தேர்தலில் பதிவான வாக்குகள் 66.14 சதவீதம். இதில் ஆண்களின் பங்களிப்பு 66.22 சதவீதம். பெண்களின் பங்களிப்பு 66.07 சதவீதம். மூன்றாம் பாலினத்தவர்கள் 31.32 சதவீதம் பேரும் வாக்களித்துள்ளனர்.

அதேபோல் 2ம் கட்ட தேர்தலில் பதிவான மொத்த வாக்கு சதவீதம் 66.71. இதில் ஆண்கள் 66.99 சதவீதம் பேரும், பெண்கள் 66.42 சதவீதம் பேரும், மூன்றாம் பாலினத்தவர் 23.86 சதவீதம் பேரும் வாக்களித்துள்ளனர்.

3ம் கட்டத்தில் 65.68 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது. இதில் 66.89 சதவீதம் ஆண்கள், 64.41 சதவீதம் பெண்கள். 25.2 சதவீதம் பேர் மூன்றாம் பாலினத்தவர்கள்.

சமீபத்தில் நடந்து முடிந்த 4ம் கட்ட தேர்தலில் 69.16 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தது. இதில் ஆண்கள் 69.58 சதவீத்தினரும், பெண்கள் 68.73 சதவீதத்தினரும், மூன்றாம் பாலினத்தவர்களில் 34.23 சதவீதத்தினரும் வாக்களித்து இருந்தனர்.

அதேபோல் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மூன்றாம் பாலினத்தவர்களின் வாக்கு சதவீதமும் இந்த 4 கட்ட தேர்தல்களிலும் அதிகரித்து வந்துள்ளது. 4ம் கட்ட தேர்தலில் அதிக பட்சமாக 34.23 சதவீதமும், 2ம் கட்ட தேர்தலில் குறைந்தபட்சமாக 23.86 சதவீதமும் பதிவாகி இருந்தது.

வரும் காலங்களில் இது இன்னமும் அதிகரிக்கலாம். இதன் மூலம் தேர்தல் கமிஷனின் முயற்சிகள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைந்துள்ளது என்பதை காட்டுகிறது.

4 கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் மேற்குவங்காளம், ஆந்திர மாநிலத்தில் மட்டுமே பிரச்சினைகள் இருந்தது. அதிலும் ஆந்திர மாநிலத்தில் தேர்தலுக்கு பிறகும் வன்முறை தொடர்ந்தது. அதைத்தவிர அனைத்து பகுதிகளிலும் வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்றது.

இந்த சூழ்நிலையில் 5ம் கட்ட தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதில் 49 தொகுதிகள் அடங்கும்.

தற்போது வட மாநிலங்களில் வெயில் அதிகம் வாட்டி வருகிறது. அதையும் தாண்டி வாக்காளர்கள் தங்களது வாக்குகளை செலுத்துவார்கள்.

ஜனநாயகத்தில் ஓட்டு என்பது நமக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமை. அந்த ஓட்டை கட்டாயம் செலுத்துவது என்பது நமது கடமை.

# ஜே.இ.இ. முதன்மைத் தேர்வு: தமிழக மாணவர் 100% மதிப்பெண் பெற்று சாதனை

சென்னை, மே.20

ஜே.இ.இ. முதன்மைத்தேர்வு முடிவில், தமிழக மாணவர் 100% மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளார்.

நாட்டில் உள்ள ஐ.ஐ.டி., என்.ஐ.டி., உள்பட மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை ஜே.இ.இ. நுழைவுத்தேர்வு அடிப்படையில் நடத்தப்படுகிறது. இந்த தேர்வானது, ஜே.இ.இ. முதன்மை தேர்வு, அட்வான்ஸ்டு தேர்வு என 2 கட்டங்களாக நடத்தப்படுகிறது. ஜே.இ.இ. முதல் தாள் தேர்வு பி.இ மற்றும் பி.டெக் படிப்புகளுக்கும், ஜே.இ.இ. இரண்டாம் தாள் தேர்வு பி.ஆர்க் மற்றும் பி.பிளான் படிப்புகளுக்கும் நடைபெறும்.

அந்தவகையில், நடப்பு கல்வியாண்டுக்கான ஜே.இ.இ இரண்டாம் தாள் தேர்வு கடந்த ஜனவரி 24ந்தேதியும், ஏப்ரல் 12ந்தேதியும் நடத்தப்பட்டது. தேர்வு நாடு முழுவதும் 421 மையங்களில் நடைபெற்றது. தேர்வை 71 ஆயிரத்து 9 மாணவர்கள் எழுதினார்கள்.

இதற்கிடையே ஜே.இ.இ முதன்மை தேர்வின் இரண்டாம் தாள் தேர்வு முடிவுகளை தேசிய தேர்வுகள் முகமை வெளியிட்டுள்ளது. மாணவர்கள், https://jeemain.nta.ac.in என்ற இணையதளத்தில் தேர்வு முடிவுகளை அறியலாம்.

தமிழகத்தை சேர்ந்த முத்து எனும் மாணவர் ஜே.இ.இ. இரண்டாம் தாளின் 2 கட்டத்தேர்விலும் (பி.ஆர்க்) 100 சதவீத மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். தேர்வில் முறைகேடுகளில் ஈடுபட்டதாக 3 மாணவர்களின் தேர்வு முடிவுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.


## ப்ரித்வி எக்சேஞ்ச் (இந்தியா) லிமிடெட்

CIN: L30006TN1995PLC031931

**பதிவு அலுவலகம்: ஜீ ஜீ யுனிவர்சல், 2வது மாடி, கதவு எண்.2, மெக் நிக்லோஸ் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600 031, தமிழ்நாடு**

Website: www.prithvifx.com , Email: secy@prithvifx.com, Phone: 044 -43434261

**31 மார்ச், 2024ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதி முடிவுகள்**

(ஒரு பங்கு சம்பாத்தியம் தவிர, ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2024 தணிக்கை செய்தது | 31.12.2023 தணிக்கை செய்யாதது | 31.03.2023 தணிக்கை செய்தது | 31.03.2024 தணிக்கை செய்தது | 31.03.2023 தணிக்கை செய்தது |
| மொத்த வருமானம் | 93,805.06 | 1,13,353.77 | 72,353.38 | 4,16081.77 | 3,05,279.01 |
| மொத்த செலவுகள் | 93,294.54 | 1,12,786.39 | 72,225.47 | 4,14,262.91 | 3,04,652.44 |
| விலக்கு அயிட்டங்கள் மற்றும் வரிக்கு முன் லாபம்/நஷ்டம் | 510.52 | 567.38 | 127.91 | 1818.86 | 626.57 |
| வரிக்கு பின் லாபம்/நஷ்டம் | 324.05 | 425.01 | 37.18 | 1304.39 | 465.84 |
| மொத்த விரிவான வருமானம் | 232.75 | 464.96 | 31.19 | 1282.00 | 439.81 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10) | 824.97 | 824.97 | 824.97 | 824.97 | 824.97 |
| இதர ஈக்விடி | - | - | - | 3428.25 | 2351.63 |
| ஒரு பங்கு சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (வருடாந்திரம் அல்ல) | | | | | |
| (ஏ) அடிப்படை | 3.94 | 5.15 | 0.37 | 15.82 | 5.61 |
| (பி) டைலூட்டட் | 3.94 | 5.15 | 0.37 | 15.82 | 5.61 |

குறிப்புகள்

1) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஆண்டுக்கான முடிவடைந்த தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளின் (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சு இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.prithvifx.comல் உள்ளது.

2) 31.03.2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவு குறித்து சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் தகுதியற்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 133 இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகள் (Ind–AS) மற்றும் நிறுவனங்களின் விதிகள் 2015ன் விதி 3 (இந்திய கணக்கியல் தரநிலைகள்) மற்றும் நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) திருத்த விதிகள், 2016ன் கீழ் தயாரிக்கப்பட்டது

3) மார்ச் 31, 2024ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, மே 18, 2024 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டன.

4) கம்பெனி ஒரு பகுதியாக அதாவது ''அன்னிய செலாவணி'' என்ற பகுதியாக செயல்படுகிறது. எனவே, ஒரே ஒரு பகுதி அறிக்கையாக உள்ளது.

5) 19/09/2023 அன்று நடைபெற்ற வருடாந்திர பொதுக் கூட்டத்தில், நிறுவனத்தின் பங்குதாரர்கள் 2022–2023 நிதியாண்டிற்கான ஒரு ஈக்விட்டி பங்குக்கு ரூ.0.50 இறுதி ஈவுத் தொகையாக அறிவித்தனர். நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, 20/03/2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில், பங்கு ஒன்றுக்கு ரூ.2 இடைக்கால ஈவுத்தொகையை அறிவித்தது. மார்ச் 31, 2024–ல் முடிவடைந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மொத்த ஈவுத்தொகை ரூ. 206.24 லட்சம்.

6) தனியான முடிவுகள் தொடர்பாக செபி (எல்ஓடிஆர்) விதிமுறைகள், 2015ன் கீழ் தேவைப்படும் விவரங்கள் பின்வருமாறு:

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | 31.03.2024 தணிக்கை செய்தது | 31.12.2023 தணிக்கை செய்யாதது | 31.03.2023 தணிக்கை செய்தது | 31.03.2024 தணிக்கை செய்தது | 31.03.2023 தணிக்கை செய்தது |
| வருவாய் | 93,805.06 | 1,13,353.77 | 72,353.37 | 4,16,081.77 | 3,05,279.00 |
| வரிக்கு முன் லாபம் | 511.82 | 567.44 | 115.48 | 1,820.32 | 619.98 |
| வரிக்கு பின் லாபம் | 325.33 | 425.07 | 26.41 | 1305.83 | 460.91 |

7) முந்தைய காலாண்டு/ஆண்டின் புள்ளிவிவரங்கள், தற்போதைய காலாண்டின் வகைப்பாடு/வெளிப்படுத்துதலுடன் ஒத்துப்போகும் வகையில், தேவையான இடங்களில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு/ மறுவகைப்படுத்தப்பட்டு மற்றும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

**ப்ரித்வி எக்சேஞ்ச் (இந்தியா) லிமிடெட்டுக்காக**

**ஒப்பம்/– பவன் குமார் கவாத்**

**(செயல் இயக்குனர்)**

(DIN : 07095542)

**இடம்: சென்னை**

**தேதி: 18.05.2024**